# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 05.02.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா அல் அன்ஆம் -ன் 121 வது வசனத்தை ஓதினார்கள்:**

**வஸரூ ழாஹிரல் இஸ்மி வ பா[த்]தினஹ். இன்னல்லஸீன யக்ஸிபூனல் இஸ்மி ஸயுஜ்ஸவ்ன பிமா கானூ ய[ர]க்[த்]தரிஃபூன்** – வெளிப்படையானதும் மறைவானதுமான பாவத்திலிருந்து, தவிர்ந்து கொள்ளுங்கள். பாவத்தைச் சம்பாதிக்கிறவர்களுக்கு நிச்சயமாக அவர்கள் சம்பாதித்ததற்குரிய கூலி கொடுக்கப்படும். (6:121)

இந்த வசனத்தில் **இஸ்ம் [பாவம்]** என்ற சொல் இரண்டு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. **இஸ்ம்** என்ற சொல்லின் அகராதிப் பொருள்,

**1) பாவம் 2) தவறு 3) வரம்பு மீறுதல் 4) கீழ்படியாமையின் காரணமாக தண்டனைக்கு ஆளாக்கும் செயலைச் செய்வது 5) ஒருவரை நன்மை செய்வதை விட்டு தடுக்கின்ற சிந்தனை அல்லது செயல் 6) சட்ட விரோத செயல்.**

இது தவிர **ஸ[ன்]ப்** என்ற ஒரு சொல் உள்ளது. இதன் பொருளும் **பாவம்** என்பது தான். ஆனால் அகராதி வல்லுநர்கள் **ஸ[ன்]ப் – இஸ்ம்** ஆகிய சொற்களில் வேறுபாடு உள்ளது என்று கூறுகிறார்கள். **ஸ[ன்]ப்** என்பது தெரிந்தோ தெரியாமலோ செய்யப்படுகிற பாவங்கள் அல்லது குற்றங்கள் ஆகும். ஆனால் **இஸ்ம்** என்பது தெரிந்தே செய்யப்படுகின்ற குற்றங்களுக்கு பொதுவாக கூறப்படுகிறது.

இந்த வசனத்தில் இறைவன் **இஸ்ம்** என்ற வகையைச் சேர்ந்த பாவங்களைப் பற்றிய இரண்டு விஷயங்களின் பக்கம் நமக்கு கவனமூட்டியுள்ளான்.

இதில் ஒன்று, நீங்கள் வெளிப்படையான பாவத்திலிருந்தும், மறைமுகமான பாவத்திலிருந்தும் தவிர்ந்திருங்கள். ஒவ்வொரு வேலையைச் செய்யும் போதும் நன்றாக சிந்தித்துப் பாருங்கள். சில காரியங்களைச் செய்யும் போது வெளிப்படையாகவே இது **ஷய்த்தானின்** வேலையாகும். இது பாவமாகும் என்று தெளிவாக தெரியும். ஆனால் இன்னும் சில வேலைகள் வெளிப்படையாக நல்ல வேலையாகத் தெரியும். ஆனால் உண்மையில் அது தீய விளைவுகளைத் தருகின்ற செயலாக இருக்கும். அதன் உண்மை நிலை மறைந்திருக்கும். நீ இந்த காரியத்தைச் செய். இது ஒன்றும் பெரிய பாவம் இல்லை என்று **ஷய்த்தான்** கூறுவான். ஆனால் அந்த வேலையைச் செய்த பிறகு இதிலிருந்து மீழ முடியாத அளவுக்கு இதில் சிக்கிக் கொண்டேன். அந்த அளவுக்கு இது ஒரு தீய செயலாகும் என்பதை மனிதன் உணர்கிறான். இதனால் ஒரு பாவத்திற்குப் பிறகு மறு பாவம் என்று இது தொடர்ந்து கொண்டே செல்கிறது. இறையச்சத்தோடு செயல்படுகின்ற ஒருவர் வெளிப்படையான பாவங்களிலும் கவனமாக இருக்க வேண்டும். அதைப் போன்று தீய விளைவுகளைத் தருகின்ற மறைவான பாவங்களையும் கண்காணிக்க வேண்டும் என்று அல்லாஹ் கூறுகிறான். ஒவ்வொரு பணியைச் செய்வதற்கு முன்பும் இறைவனிடம் உதவி தேட வேண்டும். எந்த காரியத்தை செய்தாலும் இறைவன் அதில் காணப்படும் தீய விளைவுகளிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்று துஆ செய்ய வேண்டும். வெளிப்படையான அழகைப் பார்த்து அதை விரும்பாதீர்கள். அதன் வெளிப்படையான அழகை செய்வதற்குத் தயாராகி விடாதீர்கள். எங்கு சந்தேகத்திற்கு இடமிருக்குமோ அங்கு நல்ல முறையில் பரிசீலனை செய்யுங்கள். ஒவ்வொரு செயலைச் செய்வதற்கு முன்பும் இறைவனிடம் வழிகாட்டலையும் உதவியையும் தேடுங்கள். இதனால் அந்த செயலில் பரக்கத் கிடைக்கிறது. அவ்வாறே தீமையிலிருந்தும் தீய விளைவுகளிலிருந்தும் மனிதன் தப்பித்துக் கொள்கிறான்.

இரண்டாவதாக, (இந்த வசனத்தில் இறைவன் கூறுவதாவது) வாழ்க்கையில் இறையச்சத்தை கருத்தில் கொள்ளவில்லை என்றால், கண்ணும் கருத்துமாக அடி எடுத்து வைக்கவில்லை என்றால், ஹலால் மற்றும்

ஹராம் ஆகியவற்றின் வேறுபாட்டை புரியவில்லை என்றால் தீமையையும், பாவத்தையும் செய்து விடுவீர்கள். நீங்கள் செய்த பாவத்திற்கு தண்டனை கிடைக்கும். எங்களுக்கு தெரியாது என்று சாக்குப்போக்கு கூற முடியாது.

இந்த வசனத்திற்கு முந்தைய வசனத்தில் இறைவன் ஒரு அடிப்படை விஷயத்தை போதிக்கிறான். அதாவது பலர் தமது விருப்பத்திற்கு ஏற்றார்போல் வழி கெடுக்கிறார்கள். எனவே நீங்கள் சுதாரிப்பாக இருக்க வேண்டும். ஹலால் ஹராம் ஆகியவற்றில் உள்ள வித்தியாசத்தை தெரிந்து கொள்ளுங்கள். இறைவன் தடுத்துள்ள செயல்களைச் செய்யாதீர்கள். இந்த வசனத்திற்குப் பிறகும் நீங்கள் தவிர்ந்திருக்கவில்லை என்றால், தீய வழியில் செல்கிறீர்கள் என்றால், தீய வழியில் செல்பவர்களைப் பின்பற்றினால் பிறகு நீங்கள் இதை தெரிந்து கொண்டே பாவம் செய்கிறீர்கள் என்பது வெளிப்படையாகும். அவ்வாறு தெரிந்து கொண்டே பாவம் செய்வதனால் அந்தப் பாவங்கள் தண்டனைக்கு காரணமாக அமைந்து விடுகின்றன. பாவங்கள் அதாவது **இஸ்ம்** என்பதைப் பற்றி இறைவன் திருக்குர்ஆனின் பல்வேறு இடங்களில் கட்டளையிட்டுள்ளான். அதில் ஒரு சில விஷயங்களை நான் இங்கு எடுத்துரைக்கிறேன்.

**இறைவன் சூரா அஃராஃபில் இவ்வாறு கூறுகிறான்:**

“நீர் கூறுவீராக! வெளிப்படையானதும், மறைமுகமானதும் ஆகிய தீய செயல்களையும், பாவம், நியாயமின்றிச் செய்யப்படும் கிளர்ச்சி ஆகியவற்றையும் சான்று எதுவும் இல்லாத நிலையில் நீங்கள் அல்லாஹ்வுக்கு இணை வைத்தலையும், நீங்கள் அறியாததை அல்லாஹ்வின் மீது (இட்டுக்கட்டி) கூறுவதையும் நிச்சயமாக என் இறைவன் விலக்கியுள்ளான்.” (7:34)

இவ்வசனத்தில் இறைவன், எல்லா விதமான தவறான மற்றும் ஷய்த்தானிய செயல்களையும் இஸ்லாம் கடுமையாக தடுக்கிறது என்பதை தெளிவுபடுத்தியுள்ளான். எந்த செயல் தக்வாவின் படி செயல்பட வைக்கிறது? எந்த செயல் தக்வாவை விட்டு விலக்குகிறது? என்பதை சிந்தித்து உணர்வது மூஃமினாக வாழ்வதற்கு மிக அவசியமானதாகும். சில தவறான செயல்கள் மனிதனுக்கு மறைமுகமாகவும் நிகழ்ந்து விடுகின்றன என்பதில் சந்தேகம் இல்லை. இவ்வாறான வேளைகளில், நான் ஆதமை வழிகெடுத்தது போன்று ஆதமின் மக்களையும் எவ்வாறு வழிகெடுப்பது? தீய செயல்களின் அழகை மனிதனிடம் ஏதாவதொரு வழியில் காட்டி அவன் இதை தவறு என்று எண்ணுவதற்குப் பதிலாக இதை நன்மை என்று கருதி குற்றம் புரிய வைப்பது என்று ஷய்த்தான் திட்டம் தீட்டுகிறான். இவ்வாறு மனிதன் தீமையில் மூழ்கி அதை தொடர்ந்து செய்பவனாக மாறி விடுகிறான். எனவே இந்த செயல்கள் எல்லாம் ஹராமாகும். இதிலிருந்து தவிர்ந்திருங்கள் என்று இறைவன் நமக்கு விழிப்பூட்டுகிறான். இவை உங்களை தண்டனைக்குரியவர்களாக்கி விடும். எனது இறைவன் வெட்கக்கேடான காரியங்களை ஹராம் ஆக்கியுள்ளான். அது வெளிப்படையான வெட்கக்கேடு மற்றும் தீமையாக இருந்தாலும் மறைவான வெட்கமற்ற செயலாக இருந்தாலும் அவை அனைத்தும் தடுக்கப்பட்டவை என்று நீர் கூறுவீராக என்று இறைவன் கூறுகிறான்.

வெட்கக்கேடான செயல்கள் எல்லாம் உங்களுக்கு ஹராமாகும் என்று மட்டும் கூறி இறைவன் அத்தோடு நிறுத்திவிடவில்லை. மாறாக எங்கு இறைவன் இந்தந்த செயல்கள் வெட்கக்கேடானவை; இந்தந்த செயல்கள் தீமைகள் என்று கூறுகிறானோ அங்கு அதிலிருந்து விலகுவதற்கு சிகிச்சையையும் வழங்குகிறான். வெட்கக்கேடான செயல்களிலிருந்து நீங்கள் எவ்வாறு விலக முடியும் என்ற வழிகளையும் இறைவன் கூறுகிறான்.

**ஓரிடத்தில் இறைவன் கூறுகின்றான்:**

**இன்னஸ்ஸலா[த்]த தன்ஹா அனில் ஃபஹ்ஷாஇ வல்முன்[க்]கர்** – நிச்சயமாக தொழுகை வெட்கக் கேட்டிலிருந்தும், பகிரங்கமான தீமையிலிருந்தும் (ஒருவனைத்) தடுக்கின்றது. (29:46)

வெட்கக் கேடான காரியங்கள் மனிதனின் அன்றாட வாழ்க்கையில் மிக அதிகமாக காணப்படுகின்றன. தனது பக்கம் மனிதனை ஈர்க்க அவை முயற்சி செய்கின்றன. எனவே அல்லாஹ், ஐவேளை தொழுகையை தொழுமாறு கட்டளையிட்டு தனது அடைக்கலத்தில் வருமாறு கூறியுள்ளான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

தொழுகை என்றால் என்ன? அது ஒருவகையான துஆவாகும். (தொழுகை) மனிதனை எல்லா விதமான தீமைகளிலிருந்தும் பாதுகாக்கிறது. வெற்றிகளுக்கு தகுதி உள்ளவனாகவும், வெகுமதிகளைப் பெறத்தக்கதாகவும் மனிதனை ஆக்குகின்றது. அல்லாஹ் தனது சாயலில் மனிதனை உருவாக்கியுள்ளான் என்று கூறப்பட்டுள்ளது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

சிந்தியுங்கள். தொழுகை **அஸான்** –லிருந்து ஆரம்பமாகிறது. அஸான் (தொழுகையின் அழைப்பு) **அல்லாஹு அக்பர்** –லிருந்து ஆரம்பமாகிறது. அதாவது அல்லாஹ்வின் பெயரிலிருந்து ஆரம்பமாகிறது. **லாயிலாஹ இல்லல்லாஹ்** என்று முடிகிறது. இது இஸ்லாமிய வணக்கமுறையில் மட்டுமே காணப்படுகிறது. அதில் ஆரம்பத்திலும் முடிவிலும் அல்லாஹ்வே இலக்கு என்று ஆக்கப்பட்டுள்ளது. இப்பெருமை இஸ்லாத்திற்கு மட்டுமே உரியது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நான் வாதிட்டுக் கூறுகின்றேன். இதுபோன்ற இபாதத் வேறு எந்த சமுதாயத்திலும் இல்லை. தொழுகை என்பது துஆ ஆகும். அதில் அல்லாஹ் என்ற உயரிய நாமத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அதே போன்று மனிதனுக்கு இஸ்மே அஃஸம் (உன்னதமான உயரிய நாமம்) ஆக விளங்குவது இஸ்திகாமத் (நிலைநிற்றல்) ஆகும். மனிதன் எதன் மூலம் முழுமைத் தன்மையை பெற முடியுமோ அதுவே இஸ்மே அஃஸம் ஆகும். மனிதன் நிலைத்து நிற்றலும் இஸ்மே அஃஸம் ஆகும். கடும் முயற்சியுடன் இறைவனை நெருக்கமாக்குகிற தொழுகையைத் தேடிப் பெறுகிறார். அந்நிலையில் மனிதன் இறைவனை நெருங்குகிறான். அந்த ஷய்த்தானின் தாக்குதலிலிருந்து பாதுகாக்கப்படும் தொழுகையை அம்மனிதனுக்கு அல்லாஹ் வழங்குகிறான். அது வெட்கக் கேடானதை விட்டும் தடுக்கிறது. வெற்றிகளை வழங்குகிறது. மறைமுகமான மற்றும் வெளிப்படையான தீய விருப்பங்களிலிருந்து மனிதன் பாதுகாப்பாக இருக்கின்றான். அத்தகைய தொழுகையைப் பெறுவதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு அதிகமாக வழிகாட்டல் வழங்கியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

தொழுகை எத்தகையது எனில் அதனால் உலகமும் கிடைக்கிறது. மார்க்கமும் கிடைக்கிறது. தொழுகை எத்தகையது எனில் அதன் மூலம் மனிதன் ஒருவகையில் கெட்ட செயல், வெட்கக்கேடான செயல்களிலிருந்து பாதுகாக்கப்படுகிறான். ஆனால் அத்தகைய தொழுகையை தொழுவது மனிதனின் கட்டுப்பாட்டில் இல்லை. இறைவனிடம் உதவி கேட்காமல் அத்தகைய தொழுகையை பெற முடியாது. மனிதன் எதுவரை துஆவில் மூழ்குவதில்லையோ அதுவரை அந்த இறையச்சம் உருவாகாது. எனவே உங்களின் பகல் இரவு இரண்டிலும் சுருக்கமாக ஒரு வினாடி கூட துஆவிலிருந்து வெறுமையாக இருக்கக் கூடாது.

எனவே நாம் அல்லாஹ்வின் நினைவின் மூலம் உள்ளத்தை நிரப்புவது அவசியமாகும். ஏனெனில் இன்று வெட்கக்கேடு எல்லா இடத்திலும் காணப்படுகிறது. இதிலிருந்து தப்பித்து விடுங்கள். அவ்வாறு செய்யாவிட்டால் ஷய்த்தான் பாவத்தில் மனிதனை மூழ்குமாறு செய்து விடுகிறான். நமது கடமைகளைச் செய்வதிலிருந்து தடுத்து விடுகிறான். பிறகு தவறுக்கு மேல் தவறு மனிதனிடம் தென்படத் தொடங்குகிறது. அல்லாஹ்வுடைய கட்டளைக்கு கட்டுப்படாமல் போய் விடுகிறான். எனவே கட்டுப்படாமையிலிருந்தும் தப்பித்து விடுங்கள். கட்டுப்படாமையும் ஹராமே ஆகும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். இந்த உணர்வு வரவில்லை எனில் எந்த வரம்புகளையும் உடைத்து விடுவீர்கள். எந்த அமல் சிறந்தது? ஸாலிஹானது? எந்த அமல் அதற்கு மாற்றமானது என்ற உணர்வு இல்லாமல் போய் விடும். சில தொழுகையாளிகள் கூட இறை வரம்புகளை மீறுபவர்களாக இருக்கின்றனர்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

உயர் தகுதி உடைய தொழுகையை அடைவதற்கு இறை உதவியும் அவனிடம் உதவி கேட்டலும் அவசியமாகும். எல்லா வகையான **ஷிர்க்கில்** இருந்தும் உங்களை தூய்மையாக்கிக் கொள்வது அவசியமாகும். இந்நிலையை அடையும் போது ஒரு மூஃமின் உண்மையான மூஃமின் என்று அழைக்கப்படுவார். அப்போதுதான் அவரால் வெட்கங்கெட்ட செயல்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். சூரா பக்கராவில் இதுபற்றி இன்னும் இறைவன் கூறுகின்றான்.

**யஸ்அலூன[க்]க அனில் [kh]ஹம்ரி வல்மய்ஸிர். [q]குல் ஃபீஹிமா இஸ்முன் க[b]பீருவ் வமனாஃபிஉ லின்னாஸி வஇஸ்முஹுமா அக்பரு மின்னஃப்இஹிமா** – அவர்கள் உம்மிடம் மதுவைப் பற்றியும், சூதாட்டத்தைப் பற்றியும் வினவுகின்றனர். இவ்விரண்டிலும் மக்களுக்குப் பெரும்பாவமும் (பாதிப்பும்), சில பயன்களும் உள்ளன. இவற்றின் பாவம் இவற்றிலுள்ள பயனைவிட மிகவும் பெரியதாகும் என்று நீர் கூறுவீராக. (2:220)

மது, சூதாட்டம் இரண்டிலும் பெரும் பாவம் உள்ளது என்றும், அதில் சிறிதும் பயன் இல்லை என்றும் கூறப்பட்டு விட்டது. ஆனால் அதன் பாவம் பயனை விட அதிகமானது என்று இந்த வசனத்தின் கடைசியில் அல்லாஹ் கூறுகின்றான். இவ்வாறு நீங்கள் சிந்தித்து உணர்வதற்காக இறைவன் தனது வசனங்களைத் தெளிவாக விளக்கிக் கூறுகிறான்.

அல்லாஹ் உருவாக்கிய ஒன்றில் நிச்சயமாக பயன் இருக்கிறது என்று அல்லாஹ் கூறிவிட்டான். அதில் சிறிது **நஷ்டமும்** உள்ளது. எந்தவொரு பொருளின் **நஷ்டம்** அதன் லாபத்தை விட அதிகமாக இருக்குமோ அதை பயன்படுத்துவதிலிருந்து விலகி விடுங்கள். மதுவும், சூதாட்டமும் பெரும் பாவங்களாகும். இஸ்முன் – பாவம் என்ற சொல்லின் அகராதிப் பொருளை கூறினேன். இறைவன் ஓரிடத்தில் கூறுகிறான்.

**வமய் யஃப்அல் ஸாலிக யல்க அஸாமா** – இதனைச் செய்பவர் (தன்) பாவத்திற்குரிய தண்டனையைப் பெற்றுக் கொள்வார். (25:69)

மதுவிலும், சூதாட்டத்திலும் அல்லாஹ் பயன்களை வைத்திருந்தபோதிலும், சிறிது பயன் பெறுதல் போதுமானதா? நிறைய பயன் கிடைக்க வேண்டுமே என்று சிந்தித்துப் பாருங்கள் என்றும் அல்லாஹ் கூறி விட்டான்.

இதில் பயன் இருக்கிறதா இல்லையா என்று பாருங்கள் என்று அல்லாஹ் கூறவில்லை. மாறாக, நான் இதை பயன்படுத்தி விட்டால் அல்லது இதனை செய்தால் பாவியாகி விடுவேன்; தண்டனைக்குரியவனாகி விடுவேன். பாவம் மிகப் பெரியது என்று கூறி இக்குற்றத்தின் தண்டனை நிச்சயம் கிடைக்கும் என்று கூறிவிட்டான். இது எத்தகைய பாவம் என்றால் மனிதன் ஒரு முறை அதில் இறங்கி விட்டால் பிறகு அது அதிகரித்துக் கொண்டே செல்கிறது. பலவந்தமாக பிறகு வீழ்ந்து கொண்டே செல்வான். போதனை மனிதனைக் கட்டுப்படாதவனாக்கி தண்டனைக்குரியவனாக்கி விடுகிறது.

மதுவும், சூதாட்டமும் மனிதனின் தூய பொருளை வீணாக்குவது மட்டுமின்றி, ஹராமான பொருளை தூய்மையான பொருளுடன் சேர்த்து எல்லா பொருளையும் அசுத்தமாக்கி விடுகிறது. குடிகாரனின் குடியால் பொருள் விரயம் ஏற்படுகிறது. தனது ஆரோக்கியத்தையும் அழித்து விடுகிறான். திருக்குர்ஆன் இன்னோரிடத்தில் மது, சூதாட்டம், அம்பு எறிந்து குறி பார்த்தல் அனைத்தும் **ஷய்த்தானிய** செயல்கள் என்று தெளிவாக குறிப்பிட்டுள்ளது. அவை நன்மையிலிருந்து தடுக்கின்றன. உயர் நல்லொழுக்கத்தில் இருந்தும் தடுக்கிறது. இபாதத்துகளிலிருந்தும் தடுக்கிறது.

**சூரா மாயிதாவில் அல்லாஹ் கூறுகிறான்:**

**யா அய்யுஹல்லஸீன ஆமனூ இன்னமல் [kh]ஹம்ரு வல்மய்ஸிரு வல்அன்ஸாபு வல்அஸ்லாமு ரிஜ்ஸும் மின்அமலிஷ் ஷய்த்தானி ஃபஜ்தனிபூஹு லஅல்ல[க்]கும் துஃப்லிஹுன்** – நம்பிக்கை கொண்டவர்களே! போதைப் பொருள்கள், சூதாட்டம், சிலை (வழிபாடு)கள்,

குறி பார்க்கும் அம்புகள் ஆகியன அருவருக்கத் தக்க(தும்) ஷய்த்தானின் செயலுமேயாகும். எனவே நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு, அவற்றிலிருந்து (முற்றிலும்) விலகிக் கொள்ளுங்கள். (5:91)

**இன்னமா யுரீதுஷ் ஷய்த்தானு அய்யூ[q]கிஅ பய்ன[க்]குமுல் அ[d]தா வ[த்]தவல் ப[gh]க்லாழாஅ ஃபில் ஹம்ரி வல்மய்ஸிரி வயஸு[dh]த்த[க்]கும் அன்ஸிக்ரில்லாஹி வஅனிஸ்ஸலாத். ஃபஹல் அன்[த்]தும் முன்[த்]தஹூன்** – போதைப் பொருள்கள் சூதாட்டம் ஆகியவற்றால் உங்களுக்கிடையே பகையையும், வெறுப்பையும் உருவாக்கி அல்லாஹ்வை நினைவு கூர்வதிலிருந்தும் தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்து விடவே ஷய்த்தான் விரும்புகிறான். எனவே நீங்கள் (இவற்றிலிருந்து) தவிர்ந்து கொள்ள மாட்டீர்களா? (5:92)

**வஅ[த்]தீவுல்லாஹ வஅ[த்]தீவுர்ரஸூல வஹ்ஸரூ ஃபஇன் தவல்லய்[த்]தும் ஃபஃலமூ அன்னமா அலா ரஸூலனல் பலா[gh]குல் முபீன்** – நீங்கள் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு நடவுங்கள். மேலும் இந்தத் தூதருக்கும் கட்டுப்பட்டு நடவுங்கள்; விழிப்பாக இருங்கள். நீங்கள் புறக்கணித்து விட்டால், தூதைத் தெளிவாக எடுத்துரைப்பதே நம் தூதரின் கடமை என்பதனைத் தெரிந்து கொள்ளுங்கள். (5:93)

இன்றைய காலத்தில் மது அருந்தும் பழக்கம் இந்த நாடுகளில் சாதாரணமாக காணப்படுகின்றன. கட்டுப்பாடுகள் உள்ள இடத்திலும் கூட மக்கள் மறைமுகமாக குடிக்கவே செய்கின்றனர். இந்த நாடுகளில் ஏதாவது ஒரு வகையில் குடிப்பதற்கும் தூண்டப்படுகிறது. பெரிய ஸ்டேஷன்களில், கடைகளில் சூதாட்டமும் நடைபெறுகிறது. சிலைவணக்கம் வெளிப்படையாக இல்லாத இடங்களிலும் நஃப்ஸின் சாக்குபோக்குகளால் பல இணை வைத்தல்கள் நடைபெறவே செய்கின்றன. ஈமான் கொண்ட நிலையிலும் கூட மனிதன் பொருட்படுத்தாமல் சில காரியங்களைச் செய்கின்றான். இந்த சிலைகள் பிறகு இபாதத்துகளுக்கு தடையாக வந்து அமர்கின்றன. தொழுகைகளுக்கு தடையாக வருகின்றன. சில மறைமுகமான ஷிர்க்குகள் இத்தடைகளை ஏற்படுத்துகின்றன. இக்காலத்தில் லாட்டரி அவ்வகையில் சேர்ந்தவை. மக்கள் எதையும் பொருட்படுத்தாமல் லாட்டரி டிக்கெட்டுகள் வாங்குகின்றனர். அதுவும் ஹராமாகும். இவை ஷய்த்தானிய வேலையாகும் என்று அல்லாஹ் கூறுகின்றான். ஒரு உண்மையான மூஃமின் இபாதத்துகளில் நிலைநிற்க வேண்டும். நற்செயல்கள் செய்வதில் நிலைத்து நிற்க வேண்டும். தீமைகள்,மானக்கேடான காரியங்களிலிருந்து விலகுவதில் நிலைத்து நிற்க வேண்டும். அல்லாஹ்வின் நினைவும் தொழுகையில் கவனமும் ஏற்படும்போதுதான் இந்த இஸ்திகாமத் – நிலைத்து நிற்றல் கிடைக்கும்.

பிறகு நன்மை மற்றும் தக்வாவில் முன்னேறுதல் பாவத்திலிருந்து தப்பித்தல் ஆகியவற்றை குறித்து அல்லாஹ் ஒரிடத்தில் கூறுகின்றான்.

**வ[த்]தஆவனூ அலல்பிர்ரி வத்தக்வா வலா தஆவனூ அலல்இஸ்மி வல்உ[d]த்வானி வத்த[க்]குல்லாஹ். இன்னல்லாஹ ஷதீதுல் இகாப்** – நேர்மையிலும், இறையச்சத்திலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவுங்கள். பாவம், வரம்பு மீறுதல் ஆகியவற்றால் ஒருவருக்கொருவர் உதவாதீர்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ்வின் தண்டனை கடினமானது. (5:3)

இது இஸ்லாத்தின் அழகிய போதனையாகும். இதில் பகைமையின் காரணத்தால் வரம்பு மீறக் கூடாது. எவரின் மீதும் உள்ள பகைமையும் உங்களை வரம்புமீற தூண்டக் கூடாது என்று கூறப்பட்டுள்ளது. அதற்குப் பிறகு நேர்மையிலும் இறையச்சத்திலும் ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அசல் தக்வா ஒரு மூஃமினிடத்தில்தான் உள்ளது; இருக்கவும் முடியும். ஆகவே நல்ல விஷயங்களில் தக்வாவை மேற்கொண்டு ஒத்துழைப்பு நல்க வேண்டும். தக்வா ஒவ்வொரு காரியத்திலும் நடுவில் இருக்க வேண்டும். ஒரு மூஃமினுக்கு மீண்டும் மீண்டும் கவனமூட்டத்தக்கதும் கவனம் இருக்க வேண்டியதும் நன்மையான காரியங்களாகும்.

ஒரு மூஃமினிடமிருந்து தெரிந்தே செய்யும் எப்பாவமும் வெளிப்படவே கூடாது. வரம்பு மீறுபவரை வரம்பு மீறுமாறு செய்யக் கூடாது. வரம்பு மீறுபவருக்கு, தான் என்ன செய்கிறோம் என்று தெரியாது. அவர் அளவற்ற அநீதிகளை இழைக்கின்றார்.

அல்லாஹ் கூறுகின்றான்: இஸ்ம் வல்உதுவான் – பாவம், வரம்பு மீறுதல் மற்றும் மீண்டும் மீண்டும் செய்யும் பாவங்களிலிருந்து விலகமாட்டீர்கள் எனில் அல்லாஹ் தண்டனை கொடுப்பதிலும் கடுமையானவன் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

இந்த அழகிய போதனையை இஸ்லாம் தன்னகத்தே கொண்ட நிலையிலும் இஸ்லாம் வரம்பு மீறுகிறது என்றும், அநீதியிழைத்தே பரவியது என்றும் பழிசுமத்தப்படுகிறது. இக்காலத்தில் இஸ்லாத்தின் மீது இதுபோன்ற பழிகள் அவ்வப்போது சுமத்தப்படுகின்றன. ஆனால் இக்காலத்தில் மேற்கத்திய நாடுகளில் என்ன நடக்கிறது என்று பார்த்தால் ஈராக் போன்ற நாடுகளில் அநீதியிழைக்கப்படுகிறது. இன்னும் சில நாடுகளில் அதுதான் நடைபெறுகிறது. ஈராக் பற்றி பொது விசாரணை செய்தவாறு கேட்டுள்ளோம். அங்கு அநீதி நடந்தது; நடக்கிறது என்று கூறியுள்ளனர். அவ்வாறு இருந்தும் சிலர் முற்றிலும் சரியாகவே உள்ளது என்கின்றனர். இஸ்லாம் கூறுகிறது. இது சரியல்ல. தவறு செய்தால் தவறை ஒப்புக் கொள்ள வேண்டும். நன்மை அதிகரிக்க செய்வதிலும் தூய்மைப்படுத்த வேண்டியதிலும் அவசியம் இருக்கும் நிலையில் தேவையான இடங்களில் தக்வாவுடன் நன்மையை பரப்புங்கள். வரம்பு மீறுதலிலிருந்து உங்களை தடுத்துக் கொள்ளுங்கள். இதனை செய்யாவிட்டால் அது ஒரு மூஃமினை தண்டனைக்கு தகுதியுள்ளவராக்கி விடுகிறது. மற்றவருக்கு இதில் எந்த அளவுக்கு கவனமூட்டப்பட்டுள்ளதோ அதே அளவு நாமும் இவ்விஷயத்தில் கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

**இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜமாஅத்திற்கு போதனை செய்தவாறு கூறுகின்றார்கள்:**

பலவீனமான சகோதரர்களுக்கு உதவி செய்வதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். இரு சகோதரர்கள் ஒருவர் வீழ்ச்சியடைவதை பார்த்து மற்றவர்அவரை மூழ்கிவிடாமல் காப்பாற்றாமல் இருப்பது எத்தகைய பொருத்தமற்ற செயல்! அவரை காப்பாற்றுவது மற்றவர் மீது கடமையாகும். அவரை மூழ்கவிட்டுவிடக் கூடாது. பலவீனமானவர்களுக்கு உதவி செய்யுங்கள். அவர்களின் பொருளாதார தாழ்வு நிலையில் பங்கு கொள்ளுங்கள். அவர்களின் உடல் பலவீனத்திற்கு சிகிச்சை செய்யுங்கள். பலம் மிக்கவர்கள் பலவீனமானவர்களுக்கு உதவி செய்யவில்லை என்றால் எந்த ஜமாஅத்தும் ஒரு ஜமாஅத்தாக இருக்க முடியாது. பலவீனங்களை திரையிட வேண்டும். சஹாபாக்களுக்கும் இந்த போதனை தான் தரப்பட்டிருந்தது. பலவீனமானவர்களைப் பார்த்து வெறுப்படையாதீர்கள். நீங்களும் பலவீனமானவர்களாகவே இருந்தீர்கள். அதேபோன்று பெரியவர்கள் சிறியவர்களுக்கு சேவை செய்ய வேண்டும். அன்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

மேலும் கூறினார்கள்: ஒருவர் மற்றவரை தின்றால் அது ஜமாஅத் ஆகாது. நான்கு பேர் சேர்ந்து அமர்ந்து கொண்டு ஏழைகளை இழிவுபடுத்துதல், குறை கூறுதல், ஏளனமாக பார்த்தல் போன்றவை ஒருபோதும் கூடாது. ஒன்றாக இருக்க வேண்டும். பலம் பொருந்தியவர்களாக இருக்க வேண்டும். ஒருமைப்பாடு இருக்க வேண்டும். அதனால் அன்பு அதிகரிக்கிறது. பரக்கத் ஏற்படுகிறது. உயர் நல்லொழுக்கங்களை ஏன் விசாலமாக்குதில்லை? கருணை, பிரியம், மன்னிப்பு, மரியாதை ஆகியவற்றை எல்லாருக்கும் பொதுவாக நடைமுறைப்படுத்த வேண்டும். எல்லாரின் மீதும் கருணை, அனுதாபம், குறைகளை மறைத்தல் போன்ற நடைமுறையைக் கடைபிடிக்க வேண்டும். சிறு சிறு விஷயத்திற்கெல்லாம் உள்ளம் சங்கடப்படும்படியான கடுமை காட்டக் கூடாது. சிலர் சிலருடன் அனுதாபத்துடன் நடந்தால் தான் அது ஜமாஅத் ஆகும். இந்நிலை உருவானால் எல்லாரும் ஒன்றாகி ஒருவர் மற்றவருக்கு உடல் உறுப்புகள் போன்று ஆகிவிடுவர்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் தமது சஹாபாக்களுக்கு இந்த ஆற்றல்வாய்ந்த வழியைத்தான் கற்றுக் கொடுத்தார்கள். ஒரு தங்க மலையை செலவழித்து இருந்தாலும் அவர்களுக்கு இந்த ஆற்றல் கிடைத்திருக்காது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மூலமாகத்தான் அது அவர்களுக்கு கிடைத்தது. இந்த நல்லொழுக்கத்தை நிலைநாட்டும் பொருட்டுதான் அல்லாஹ் இந்த ஜமாஅத்தை உருவாக்கினான். இந்த

உயர் நல்லொழுக்கமே நன்மையிலும் தக்வாவிலும் வளர்ச்சி தரக்கூடியதாகும். மேலும் பாவத்திலிருந்து காப்பாற்றக் கூடியதும், வரம்பு மீறுதலை தடுப்பதும் ஆகும்.

இபாதத்துகள் மூலம் இறைநெருக்கம் உருவாவது போன்று இந்த நல்லொழுக்கம் மூலம் அடியார்களுக்கான உரிமையை வழங்குவதில் கவனம் ஏற்படுகிறது. பிறகு இன்னொரு பெரும் தீமையைப் பற்றி கவனமூட்டியவாறு இறைவன் கட்டளையிட்டான்.

**யா அய்யுஹல்லஸீன ஆமனுஜ்[த்]தனிபூ கஸீரம் மினழ்ழன்னி இன்ன பஃழழ் ழன்னி இஸ்முவ் வலா தஜஸ்ஸஸு வலா யக்[த்]தப் பஃலு(k)கும் பஃழா. அயுஹி(b)ப்பு அஹது(k)கும் அய்யஃ(k)குல லஹ்ம அஜீஹி மய்[த்]தன் ஃப(k)கரிஹ்[த்]துமூஹ். வத்தகுல்லாஹ். இன்னல்லாஹ தவ்வாபுர் ரஹீம்** – நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அதிகமான யூகங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். ஏனெனில் சில யூகங்கள் பாவமாகும். பிறர் குற்றங்களைத் தேடி அலையாதீர்கள். உங்களுள் ஒருவருக்கொருவர் புறங்கூறாதீர்கள். உங்களுள் எவராவது மரணமடைந்துவிட்ட தம் சகோதரரின் மாமிசத்தை உண்ண விரும்புவாரா? (உங்களைக் குறித்து இவ்வாற கூறப்பட்டால்) நீங்கள் நிச்சயமாக அதனை வெறுப்பீர்கள். மேலும் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். அல்லாஹ் அதிகமாகக் கழிவிரக்கத்தை ஏற்றுக் கொள்பவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். (49:13)

அல்லாஹ் மூஃமின்களுக்குள் அன்பு, நேசம், சகோதரத்துவம் ஆகியவற்றை உருவாக்க விரும்புகிறான். இவை நல்லெண்ணம் மூலமாகவே உருவாகிறது. எனவே தப்பெண்ணத்திலிருந்து விலகுங்கள் என்று கூறினான். தப்பெண்ணம் பாவத்தின் பக்கம் எடுத்துச் செல்கிறது. இது மனிதனை நஷ்டத்தின்பால் அழைத்துச் செல்வது மட்டுமின்றி சமூகத்தின் அமைதியையும் அழித்து விடக் கூடியதாகும். உள்ளங்களுக்கிடையில் இடைவெளி உருவாகிறது. இறைவன் இதனை மிகப்பெரும் தீமையாக்கி உள்ளான். சில பாவங்களை மனிதன் நான் என்ற அகந்தையை சமாதானப்படுத்துவதற்காக செய்கிறான். எனவே இறைவன் பிறர் குற்றங்களை தேடி அலையாதீர்கள் என்று கூறியுள்ளான். சில நேரங்களில் பிறர் குற்றங்களை தேடி அலைவதும் தப்பெண்ணத்தால் உருவாகிறது. பிறர் குற்றங்களை தேடி அலையும் மனிதனுக்கு முழுமையான தகவல் கிடைக்காத பட்சத்தில் கிடைத்த தகவலை வைத்துக் கொண்டு தனது தப்பெண்ணத்தை வளர்த்துக் கொள்கிறான். தப்பெண்ணத்தால் சிலவேளை மனிதன் குருடராகி விடுகிறான். சிலரின் நிலையைப் பார்க்கும் போது பெரும் வியப்பு ஏற்படுகிறது. சின்னச்சின்ன புகார்களை பெரிதுபடுத்துகின்றனர். அதுவும் இதைவிட பெரிய விஷயம் ஒன்றுமில்லை என்று கருதுகின்றனர். இதே சிந்தனையில் செயல்படத் தொடங்குவது மட்டுமின்றி தமது வாழ்வையே நாசமாக்குகின்றனர். யாருக்கு எதிராக புகார் கூறுகிறார்களோ அவரது வாழ்வையும் நாசமாக்கி விடுகின்றனர். இதுபோன்ற சில புகார்கள் என்னிடம் வருகின்றன. அதை ஆய்வு செய்து பார்த்தால் ஒன்றுமே இருக்காது. மிகச் சாதாரண பிரச்சனையாகத்தான் இருக்கும். இன்னும் சில பிரச்சனைகள் எப்படியென்றால் இவர் நேரடியாக பிரச்சனை கேட்டும் கூட இருக்க மாட்டார். அவர் இவ்வாறு சொல்லக் கேட்டேன். இவர் இவ்வாறு சொல்லக் கேட்டேன் என்று கூறுகின்றனர். இவ்வாறு பிறர் குறைகளை தேடி அலைவதில் ஓர் ஆர்வம் ஏற்பட்டு விடுகிறது. இந்த இயல்பையும் காணுகிறோம். இன்னும் சிலர் சிறிது விஷயம் கிடைத்தாலும் அது குறித்து மேலும் துருவி, தன் பங்கிற்கு சில அடிக்குறிப்புகளையும் வைத்து பரப்பி விடுகின்றனர். ஒருவரைப்பற்றி புகார் கூறப்படும் போது புகார் கூறப்பட்ட அப்பாவியான அவரது வாழ்வும் நெருக்கடிக்கு உள்ளாகி விடுகிறது. ஏனெனில் அவர் மீது கூறப்பட்ட அப்புகாரை செவியுற்ற மனிதரும் கூட அந்த மனிதரைப் பார்க்கும் போது இவர் பெரும்பாவி என்ற கண்ணோட்டத்தில் பார்க்கிறார். சில நேரங்களில் புகார் கூறப்பட்டவர் மறைந்து திரிய ஆரம்பித்து விடுகிறார். எவ்வாறிருப்பினும் இது பெரும் பாவம். இதனை இறைவன் கடுமையாக தடுத்துள்ளான். ஒவ்வொரு அஹ்மதியும் இதிலிருந்து விலக வேண்டும். அடுத்து புறம்கூறுதல்; இதுவும் பெரும் பாவமாகும். இதனை சீர்திருத்தாவிட்டாலும் சமுதாயத்தில் பெரும் அமைதியின்மை ஏற்படுகிறது. அல்லாஹ் இந்த அசுத்தமான செயலைக் குறித்து வெறுப்பை வெளிப்படுத்தியுள்ளான். நீங்கள் அதிக நிதானமாக புறம்பேசி விடுகிறீர்கள். அது ஒன்றும் பெரிய பிரச்சனை இல்லை என்றும் கருதுகிறீர்கள். யாரைப்பற்றி பேசவேண்டுமோ பேசிவிட்டீர்கள். அதன் ரசணையையும் பெற்றுவிட்டீர்கள். ஆனால் நினைவில் கொள்ளுங்கள்! இது எத்தகைய அறுவறுப்பான விஷயம் எனில்,

நீங்கள் உங்கள் இறந்த சகோதரரின் மாமிசத்தை சாப்பிட்டு விட்டீர்கள். இறந்த சகோதரரின் மாமிசத்தை சாப்பிடுவதை யார் தான் வெறுக்கமாட்டார் ?

புறம் என்பது, ஒருவரைப் பற்றி அவருக்கு பின்னால் தவறாகப் பேசுதல் ஆகும். சீர்திருத்த விரும்பினால், ஒருவரின் நடத்தை சரியில்லை என்பது உங்கள் புகார் எனில் தனிமையில் அவரிடம் புரிய வையுங்கள். அதன் முலம் அவர் தன்னை சீர்திருத்திக் கொள்ளட்டும். சீர்திருந்துவதற்காக ஜமாஅத்தின் சம்பந்தப்பட்ட பொறுப்பாளர், அமீர் வரை கூட ஒருவரின் குறையை எடுத்துச் செல்லலாம். அவர்களின் நடவடிக்கைகளில் திருப்தி ஏற்படாவில்லை எனில் என்னிடமும் பிரச்சனையைக் கொண்டு வரலாம். சிலர் என்னிடமும் சில பிரச்சனைகளை கொண்டு வருகின்றனர். ஆய்வு செய்து பார்க்கும் போது குற்றம் சாட்டுபவர் தனது உள்ளத்தின் அழுக்குகளை வெளிப்படுத்துகிறாரேயன்றி சீர்திருத்தம் ஏற்படுத்துவது அவரது நோக்கமாக இல்லை என்று தெளிவாக தென்படுகின்றது. பிறகு குற்றம் சாட்டுபவர்களுள் பெரும்பாலார் தமது பெயரை எழுதுவதில்லை. புகார் கடிதத்தின் கீழ் ஓர் அஹ்மதி அனுதாபி என்று எழுதுகின்றனர். பிறகு ஏதாவது ஒரு பெயரை எழுதுகின்றனர். அந்த பெயரில் எவரும் இருக்கமாட்டார். இந்த மாதிரியான மக்கள் ஒருவரைப் பற்றிய தப்பெண்ணத்தை என் உள்ளத்தில் உருவாக்க முயற்சி செய்கின்றனர். அது தவிர வேறு எதுவும் அவர்கள் செய்வதில்லை. ஆனால் அதிலும் அவர்களால் வெற்றி பெற முடியாது. ஏனெனில் தமது பெயரை மறைப்பதில் இருந்து அவருக்கு எந்த அனுதாபமும் இல்லை என்று தெளிவாக தெரிகிறது. அவர் ஒருவரைப் பற்றி கெட்ட பெயர் ஏற்படுத்த விரும்புகிறார். பொதுவாக இதுபோன்ற கடிதங்களின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்போவதில்லை. முதலில் அது குறித்து ஆய்வு செய்து உண்மையை அறிய விரும்புவது எனது விருப்பமாகும். ஆனால் ஒருவர் பெயர் தெரியாவிட்டால் பிறகு விசாரணையும் செய்ய இயலாது. ஆனால் ஒருவருக்கு தண்டனை கொடுக்கும் போது கூட அவர் மீது எந்த வெறுப்பும் எனக்கு ஏற்படுவதில்லை. மாறாக துயரம்தான் ஏற்படுகிறது. ஓர் அஹ்மதிக்கு ஏதாவது ஒரு காரணத்தால் தண்டனை கிடைக்கும் போது துக்கம் ஏற்படுகிறது. ஓர் அஹ்மதி இத்தகைய விஷயங்களை நினைவில் கொள்ள வேண்டும்.

அல்லாஹ் கூறுகிறான்: வத்தகுல்லாஹ் – தக்வாவைக் கைக்கொள்ளுங்கள். இன்னல்லாஹ தவ்வாபுர் ரஹீம் – அல்லாஹ் தவ்பாவை ஏற்றுக் கொள்பவனும் மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனும் ஆவான்.(49:13)

இவ்வாறு ஒருவருக்கு தப்பெண்ணம், புறம் பேசுதல், பிறர் குறைகளை தேடி அலைதல் போன்ற வழக்கம் இருந்தால் தனது உள்ளத்தை துருவிப் பார்க்கட்டும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். அல்லாஹ்விடம் பாவங்களுக்கு மன்னிப்பு வேண்டுங்கள். இறைவன் கூறுகிறான். வெட்கம் கொண்டு பாவத்திற்காக மனம் வருந்தி என்னிடம் வருவீர்கள் எனில் நான் உங்கள் தவ்பாவை ஏற்றுக் கொள்வேன். உங்களுடன் கருணையுடன் நடந்து கொள்வேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நல்லெண்ணத்தை மனிதன் பயன்படுத்தும்போது சிறிது தவறுவதற்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. முதல் அடியே தவறின்மீது வைத்தால் பிறகு இலக்கை அடைவது சிரமமாகும். தப்பெண்ணம் மிக மிகத் தீயது. மனிதனை பல நன்மைகளில் இருந்து அது விலக்கி விடுகிறது. பிறகு மனிதனிடம் தப்பெண்ணம் படிப்படியாக அதிகரித்து இறைவன் மீதே தப்பெண்ணம் கொள்ளும் நிலை ஏற்பட்டு விடுகிறது.

**பிறகு இன்னோரிடத்தில் கூறுகின்றார்கள்:**

தப்பெண்ணம் சத்தியத்தின் வேரை துண்டிக்கக் கூடியதாகும். எனவே நீங்கள் அதிலிருந்து விலகுங்கள். சத்தியத்தின் முழுமையை அடைவதற்கு துஆ செய்யுங்கள்.

பிறகு கூறுகின்றார்கள்: சில பாவங்கள் நுட்பமானவை. மனிதன் அதனால் பிடிக்கப்பட்டு விடுகிறான். அவனால் அது பாவம் என்று கூட புரியவும் முடிவதில்லை. வாலிபன் வயோதிகத்தையும் அடைந்து விடுகிறான். ஆனால் பாவம் செய்து கொண்டிருப்பதை உணர்வதில்லை. புகார், குறை கூறிக் கொண்டே அலையும் பழக்கம்

ஏற்பட்டு விடுகிறது. அத்தகைய மக்கள் இதனை மிகவும் சின்னஞ்சிறிய தவறு என்று நினைக்கின்றனர். ஆனால் திருக்குர்ஆன் இதனை மிகவும் பாவமான காரியமாகக் கூறுகிறது.

திருக்குர்ஆன் கூறுகிறது: **அயுஹிப்(b)பு அஹது(k)கும் அய்யஃ(k)குல லஹ்ம அஜீஹி** – சகோதரரின் மாமிசத்தை உண்ண விரும்புவாரா? (49:13) இவ்வாறு இறைவன் இச்செயல் குறித்து தனது கோபத்தை வெளிப்படுத்தியுள்ளான்.

தனது சகோதரனை இழிவுபடுத்துகிற வார்த்தையைக் கூறுதல் தனது சகோதரனுக்கு துன்பம் ஏற்படுகிற செயலைச் செய்தல், தனது சகோதரனை அறிவற்றவன், முட்டாள் என்று காட்டுகின்ற பேச்சைப் பேசுதல் அல்லது சகோதரனது பழக்கவழக்கங்களை மறைமுகமாக தாக்கி தனது பகைமையை வெளிப்படுத்துவது இவை அனைத்தும் தீயவைகளாகும். அல்லாஹ் நம் அனைவயையும் எல்லா வகையான தீமைகளிலிருந்தும் தப்பிப்பதற்கு வாய்ப்பு அளிப்பானாக. எல்லா வகையான நன்மைகளையும் செய்வதற்கு வாய்ப்பளிப்பானாக. அல்லாஹ்வுடைய எல்லா கட்டளைகளின்படியும் அமல் செய்வோமாக. அவனது திருப்தியின் சொர்க்கத்தைப் பெறுவோமாக.

இன்றும் ஒரு வருத்தத்திற்குரிய செய்தி, ஸிதாம்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஜனாப் முப்தாது அஹ்மத் சாஹிப் அவர்களது மகன் சமிவுல்லாஹ் சாஹிப் பிப்ரவரி 3 ஆம் தேதி ஸிதாத்பூரில் ஷஹீதாக்கப்பட்டுள்ளார். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். அவருக்கு அவ்வூரில் ஒரு கடை இருந்தது. மோட்டார் ரிவைண்டிங் வேலைகள் செய்யும் கடை. மாலையில் கடையைப் பூட்டி விட்டு வந்து கொண்டிருந்த போது தனது ஊரை நெருங்கிய சமயத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கியால் சுட்டனர். முதலில் அருகில் வந்தனர். ஏதோ இடத்திற்கு அவரிடம் வழிகேட்டனர். மற்றவர் அவரது தலையில் துப்பாக்கியை வைத்து சுட்டார். அதே இடத்தில் ஷஹீதாகி விட்டார். அவருக்கு 53 வயது. நல்ல செயல்திறன் கொண்டவர். இஸ்லாஹ்-வ-இர்ஷாத் செயலராகவும், தஃவத்தே இலல்லாஹ் ஸயீம் அன்ஸாருல்லாஹ், நாயிப் நாஸிம் அன்சாருல்லாஹ் போன்ற பொறுப்புகள் வகித்தவர். செயல்படக்கூடிய தப்லீக் செயலராக இருந்தார். கடும் எதிர்ப்புக்கு இடையிலும் பயமின்றி தனது கடையில் M.T.A இணைப்பு கொடுத்து தப்லீக் செய்து வந்தார். ஜமாஅத்தில் கேள்வி-பதில் கூட்டமும் நடத்தி வந்தார். உறுதியான ஈமான் உடையவராகவும், வீரமிக்கவராகவும், பயமற்றவராகவும் இருந்தார். அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவர். இரு திருமணங்கள் இவருக்கு நடந்திருந்தன. ஒரு மனைவிக்கு மூன்று மகள்கள், ஒரு மகன் கனடாவில் இருக்கின்றனர். இரண்டாவது திருமணம் மூலம் ஒரு மகள், இரண்டு மகன்கள் அவருடன் உள்ளனர். அல்லாஹ் ஷஹீதுக்கு தனது திருப்தியின் ஜன்னத்தில் இடமளிப்பானாக. அவரது தகுதியை உயர்த்துவானாக. அவரது குடும்பத்தினருக்கு பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக. அவர்களுக்கு பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. தொழுகைக்குப் பிறகு இவரது ஜனாஸா காயிப் தொழுகை நடத்தப்படும்.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
**HADHRAT KHALIFATUL MASIH V**
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 05.02.2010

Translated by : **Muallim M. NIZAMUDEEN**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**